உறுப்பினர். அந்த வாக்காளர்களுக்காக அக்கறை காட்டுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருக்கும் ஆவணி அவிட்டத்திற்கும் என்ன சம்பந்தம் அவர்களுக்கு உள்ள அக்கறையை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவரையும் பாதிக்காத முறையில் யாருக்குமே இடைஞ்சல் இல்லாத முறையில் பணியாளர்கள் பணி புரிவதற்குத் தகுந்த முறையிலே பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5 அரசினர் தீர்மானங்கள்.

(அ) தனிநபர் தீர்மானங்களுக்குப் பதில் அரசினர் சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நாளை எடுக்கப்பட இருக்கிற தனி நபர் தீர்மானங்கள் அப்படியே இன்னொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். நாளைக்கு அரசாங்கத் திருத்தச் சட்ட முன்வடிவுகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/72).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவை* (தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைச் சட்டவரைவு எண். 30/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

---

*10-8-1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.